**கூடுதல் சார்பு நீதிமன்றம், பொன்னேரி**
**அசல் வழக்கு எண்.108/2018**
**நாள் 15/07/2024, திங்கட்கிழமை**

இந்நீதிமன்ற எழுத்தரால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதி தரப்பின் 1-வது சாட்சியின் வாக்குமூலம் 1878ம் ஆண்டில் 10-வது சட்டத்தின் வரைமுறைகளுக்கு உட்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் - சாந்தி | க/பெயர் - ராஜா |
| வயது - 51 | தொழில் - |
| விலாசம் - எண். 16, 3வது குறுக்கு தெரு, டி.டி. தோட்டம், பெரம்பூர், சென்னை-11. | |

**முதல் விசாரணை (DW1)**

நான் இந்த வழக்கின் 2ம்பிரதிவாதியாவேன். இந்த வழக்கை வாதி எனக்கு எதிராக தாக்கல் செய்துள்ளார். வழக்கின் விவரங்கள் அனைத்தும் எனக்கு தெரியும். எனது வழக்கிற்கு ஆதரவாக என்னுடைய நிரூபணவாக்குமூலத்தை ஏற்க்கெனவே தாக்கல் செய்துவிட்டேன். என் தரப்பு சான்றாவணமாக பி.த.சா ஆ 1 மற்றும் பி.த.சா ஆ 2 வரை குறியீடு செய்யவேண்டுகிறேன்.

1. (1). 13.03.2018 தேதியிட்ட, செங்குன்றம் சார் பதிவகம் பதிவு ஆவண எண் 1811/2018ல் பதிவு செய்யப்பட்ட எதிர்வாதிகள் 2ம் எதிர்வாதிக்கு எழுதி கொடுத்த பாக உரிமை அக்கு விடுதலை பத்திரம் சான்றிட்ட நகல் **பி.த.சா ஆ 1** ஆகவும்,

(2). 19.11.2023 தேதியிட்ட 01.12.1992 முதல் 18.11.2023 வரையுள்ள வில்லங்கம் சான்றிதழ் ஆன்லைன் நகல் **பி.த.சா ஆ 2** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.

**(குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது)**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்ன சங்கதிகள் அனைத்தும் அவர் கூறியவாறே என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப் பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டு கையொப்பம் / கைரேகை பெறப்பட்டது.

கூடுதல் சார்பு நீதிபதி,
பொன்னேரி.